**தலைப்பு 224 – இலங்கை வான்படை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை வான்படையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வான்படையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் இலங்கை வான்படையால் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை வான்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) உப பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) இலங்கை வான்படையால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது.

(ஆ) இலங்கை வான்படையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| Eagle's Bay View Rest, Eagle's Lagoon View, Eagle's Lakeside Reception Hall, Marble View Rest மற்றும் பண்ணைகள் போன்ற இலங்கை வான்படையால் உரித்தாக்கப்பட்ட செயற்திட்டங்களால் ஈட்டப்பட்ட வருமானம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை மூலம் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் நிதிகளின் செயலாற்றல் தொடர்பாக கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுதல் வேண்டும்.<br><br>இலங்கை வான்படையின் மனித மற்றும் பௌதீக வளங்கள் வர்த்தக அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட இச் செயற்திட்டங்களிற்காக பயன்படுத்தப்படுகின்றதுடன் அவற்றின் மீதான நிதிச் செயலாற்றல் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | இச் செயற்திட்டங்களிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் நலன்புரி செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்படுகின்றதன் விளைவாக அத்தகைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

**1.6.2 முற்பணக் கணக்கு மீதிகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் | முற்பணங்களை அறவீடு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களிற்கு |

| | | |
|---|---|---|
| இடம்மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முற்பண மீதிகளை தவிர்த்து உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 11.58 மில்லியன் தொகையான மொத்த முற்பண மீதி 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டன. | 8.2 ஆம் பந்திகளின் பிரகாரம் தவணை கடந்த உத்தியோகத்தர்களிற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நினைவூட்டல்களை அனுப்புவதற்கும் அறவிடமுடியாதவையாக பரிந்துரைக்கப்பட்ட முற்பண மீதிகளை பதிவழிப்பதற்கு பொதுத் திறைசேரிக்கு ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் பட்டியலிடப்பட்ட பின்னர் அதன் பிரதியொன்று சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| இலங்கை கடற்படையால் செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு தொடர்ச்சியாக பேணிச் செல்லப்படுகின்றமை கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வுகள் செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம்பெற வேண்டும். அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பந்தியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்களில் தேவையான அறிவுறுத்தல்களை கட்டளை அதிகாரி வழங்கியிருந்தார். |

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14.24 மில்லியன் கூட்டுத்தொகையான வருமான மீதிகள் நிலுவையாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 11.73 மில்லியன் கூட்டுத்தொகையான வருமான மீதிகள் 4 ஆண்டுகள் தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு மேலாக நிலுவையாக காணப்பட்டன. நிலுவையாகவுள்ள வருமானத் தொகைகளை அறவீடு செய்வது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமாக காணப்பட்டன. | நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் வருமான சேகரிப்பு உத்தியோகத்தரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தவணை கடந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களிற்கு நினைவூட்டல்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அறவிடமுடியாதவையாக பரிந்துரைக்கப்பட்ட மீதிகளை பதிவழிப்பதற்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் விமானத்தை வாடகைக்கு வழங்குவதிலிருந்தான வருமானம் ரூபா 246.30 மில்லியனாக காணப்பட்டதுடன் அதன் பின்னர் இது குறைவடையும் போக்கை காட்டியிருந்தது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 74.57 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் 49 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது வருமானம் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்பட வேண்டியதுடன் இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆகையால் நிறுவனம் சந்தையில் காணப்படுகின்ற போட்டித் தன்மையை எதிர்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வர்த்தக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கு பயன்படுத்துவதற்கான இலங்கை வான்படையின் விமானங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் தரம் என்பன குறைவடைந்திருந்ததன் விளைவாக விமானங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தன. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) உண்மையான தேவைப்பாட்டை இனங்காண்பதற்கு முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். எனினும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாததால் பாதீட்டு ஒதுக்கீடு போதியளவாக காணப்படவில்லை. ஆகையால் நிதிப்பிரமாணம் 66 இன் ஊடாக செலவினக் குறியீடுகளிற்கிடையே ரூபா 656.80 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தன. மேலும் ரூபா 627.40 மில்லியன் கூட்டுத்தொகையான ஒதுக்கீடுகள் குறைநிரப்பு மதிப்பீடுகள் ஊடாக பெறப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) ரூபா 1,585 மில்லியன் கூட்டுத்தொகையான மேலதிக நிதியேற்பாடுகள் 20 செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. தேறிய ஒதுக்கீட்டில் 8 சதவீதம் தொடக்கம் 85 சதவீதம் வரையான வீச்சில் இது காணப்பட்டது. | - மேற்படி - | விலைப்பட்டியல்களை பெறுவதில் காணப்பட்ட தாமதங்கள், கட்டுநிதிகள் காணப்படாமை, ஆண்டின் போது பெறுகைகள் மேற்கொள்ளப்படாமை, மீளாய்வாண்டில் வெளிநாட்டு நிபுணர்களின் மதியுரையின் கீழ் விமானங்களின் திருத்தங்கள் பூர்த்தி செய்யப்படாமை போன்ற காரணங்கள் மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகளில் சேமிப்புக்களை விளைவித்திருந்தது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகள் ஏற்படுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 788 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வான்படையால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 21 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதக்கீடுகளை விஞ்சி ரூபா 434 மில்லியன் தொகையான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 94 உடன் இணங்குதல் வேண்டும். | இக் குறைபாட்டை சீர்செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து மாற்றப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய 03 வரிசை அமைச்சுக்கள் மற்றும் 03 திணைக்களங்களால் ரூபா 1,026 மில்லியன் தொகை இலங்கை வான்படைக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் இலங்கை வான்படையிடமிருந்து மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 883 மில்லியன் தொகை மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால் ரூபா 143 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடுகளில் சேமிப்புக்கள் காணப்படுவதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியதுடன் உரிய நோக்கங்களிற்காக இதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 143 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாதிருந்தமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பிரதான நோக்கங்களிற்கு புறம்பான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை வான்படைக்குரிய பௌதீக, மனித மற்றும் நிதி வளங்களைப் பயன்படுத்தி தனியார் கம்பனி ஒன்றாக அதனால் முகாமை செய்யப்படும் ஹெலி ருவர்ஸ் லிமிட்டட் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான 09 ஆண்டுகளின் போது ரூபா 54.50 மில்லியன் கூட்டுத்தொகையான இலாபத்தை உழைத்திருந்ததுடன் இலங்கை வான்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடு மீது வருமானம் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. கம்பனியின் பங்குரிமை இலங்கை வான்படையின் 05 உத்தியோகத்தர்களிற்கு முழுமையாக கையளிக்கப்பட்டிருந்ததுடன் பொதுத் திறைசேரிக்கு பங்குரிமையை மாற்றுவதற்காக கம்பனியின் சீர்திருத்தத்திற்கு முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முதலீடு மீது வருமானம் ஈட்டப்பட வேண்டும். | கம்பனியின் பங்குரிமை தொடர்பான விடயங்கள் பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கட்டுநாயக்கா தள முகாமிலுள்ள ஏற்றுமதிப் பிரிவில் விமானங்களை திருத்தும் நோக்கத்திற்கு தேவையான 54 துணைக்கருவிப் பொருட்கள் காணப்பட்டமை 2019 சனவரி 31 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் | இருப்பில் காணப்படுகின்ற உரிய பொருட்கள் சேதமடைவதற்கு சாத்தியமான ஆபத்துக்களை குறைக்கக்கூடியவாறு வினைத்திறனாக பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதன் ஊடாக | வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்தான உறுதிப்படுத்தல்கள் தாமதமடைந்ததன் காரணமாக பெறுகைகளின் சில பொருட்கள் தாமதமடைவதற்கான சாத்தியமொன்று காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | போது அவதானிக்கப்பட்டது. திருத்தங்களை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு வழங்குநர்களிற்கு அத்தகைய பொருட்களை அனுப்புவதற்கு இடைநிலை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததன் விளைவாக அத்தகைய பொருட்கள் ஒரு ஆண்டிற்கு முன்னர் ஏற்றுமதிப் பிரிவிற்கு பெறப்பட்டிருந்தன. தேவையான இடைநிலை பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தன. | திருத்த நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | திருத்த நோக்கத்திற்காக 2004–2016 காலப்பகுதியின் போது வெளிநாடுகளிற்கு அனுப்பப்பட்ட 120 துணைக்கருவிப் பொருட்கள் 2018 திசெம்பர் 31 வரையிலும் இலங்கை வான்படைக்கு மீளப் பெறப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | துணைக்கருவிகளை மீளப் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதங்கள் காரணமாக விமானம் விளைவற்றிருப்பதற்கான சந்தர்ப்பத்தை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 120 துணைக்கருவிப் பொருட்கள் மீளப்பெறப்பட்டிருக்காதமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுநாயக்கா தள முகாமின் களஞ்சியங்களில் 02 ஆண்டுகளிற்கு மேலாக 09 வகைப்படுத்தலின் கீழ் ரூபா 31.35 மில்லியன் பெறுமதியான 99,615 மீற்றர் துணிக் கோப்பு (file of clothes) விளைவற்றுக் காணப்பட்டமை 2018 நவம்பர் 27 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பெறுகையை மேற்கொள்வதற்கு முன்னர் தேவைப்பாட்டை இனங்கண்டு உத்தம மட்டத்தில் இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையை பேணுதல் அவசியமானதாக உள்ளது. | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இருப்புக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | ரூபா 3.39 மில்லியன் பெறுமதியான 845009034 ஆம் இலக்க விடயத்தின் கீழ் Field Cap other Rank இன் 15,555 அலகுகளின் இருப்பு 02 ஆண்டுகளிற்கு மேலாக கட்டுநாயக்காவிலுள்ள களஞ்சியங்களில் | உண்மையான இருப்புத் தேவைப்பாட்டை மதிப்பீடு செய்த பின்னர் பெறுகைகளை மேற்கொள்ள வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் இருப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாதிருந்தன. | | |
| (இ) | ரூபா 7.90 பெறுமதியான 20 வகையான வெட்டுக்கருவிகளின் 16,813 பொருட்கள் கட்டுநாயக்கா தள முகாமின் 17 ஆம் இலக்க களஞ்சியத்தில் ஒரு ஆண்டிற்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | பல்வேறு உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளில் பயன்படுத்துவதற்காக இருப்பில் இப் பொருட்கள் காணப்படுகின்றன. |
| (ஈ) | 37 பாதுகாவலர் வாகனங்கள் மற்றும் 69 ஏனைய மோட்டார் வாகனங்கள் 01 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் கட்டுநாயக்காவிலுள்ள திருத்தம் செய்யும் வளாகங்களில் விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவை மீதான தடைகளை தவிர்த்து ஓடும் நிலைக்கு அவற்றை திரும்பக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது 37 வாகனங்களில் 12 பாதுகாவலர் வாகனங்களின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய வாகனங்களை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

### 3.4 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல் கூற்றின் பிரகாரம் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 227 நிகழ்வுகள் தொடர்பான ரூபா 1,105 மில்லியன் தொகை, 05 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் காணப்பட்ட 18 நிகழ்வுகள் தொடர்பான ரூபா 43.13 மில்லியன் தொகை மற்றும் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 35 நிகழ்வுகள் தொடர்பான ரூபா 16.83 மில்லியன் தொகை உள்ளடங்கிய 277 நிகழ்வுகளிற்குரிய ரூபா 1,165 மில்லியன் கூட்டுமொத்தமான நட்டங்கள் அறவீடு செய்யப்படுவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்காக காணப்படுகின்ற | நிதிப்பிரமாணம் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவீடு செய்வதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| நட்டங்களாக அறிக்கையிடப்பட்டிருந்தன. | | |
| (ஆ) கட்டுநாயக்கா தள முகாமின் உதிரிப்பாகங்கள் பிரிவில் காணப்பட்ட Radar Receiver மற்றும் Antenna Scanner என்பன திருத்த நோக்கங்களிற்காக 2014 ஏப்ரல் 25 இல் சீனாவிற்கு அனுப்பப்பட்டு விமானப் போக்குவரத்தின் போது காணாமல் போயிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் இலங்கை வான்படைக்கு ரூபா 74.46 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. பூர்வாங்க விசாரணை அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு இவ் அறிக்கைத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து சேதத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்ததுடன் அவை தொடர்பாக தீர்மானங்கள் காலக்கிரமத்தில் வழங்கப்படும். |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2011 நவம்பர் 30 ஆம் திகதிய 852 ஆம் இலக்க வான்படை பணிப்புரையின் 05 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் இலங்கை வான்படையின் தலைமை அலுவலகங்கள், பல்வேறு முகாம்கள் மற்றும் அலகுகளில் உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த நிதியங்களால் அமுல்படுத்தப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காகவும் இலாபம் உழைக்கும் செயற்பாடுகளுக்காகவும் இலங்கை வான்படையின் பௌதீக மற்றும் மனித வளங்கள் | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் 2016 யூன் 24 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கூட்டத்தில் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பிரகாரம் உள்ளக நிதியங்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளிலிருந்து உழைக்கப்படும் இலாபத்தின் செயற்பாடுகள் | 852 ஆம் இலக்க வான்படை பணிப்புரையின் கீழ் உள்ளக நிதியங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான வருடாந்தக் கணக்காய்வுகள் இலங்கை வான்படையின் நிறைவேற்றுக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படுகின்றன.<br><br>நிதிப்பிரமாணம் 154 இன் பிரகாரம் இந்த உள்ளக நிதியங்கள், நியதிச் சட்ட நிதியங்களாக ஸ்தாபிக்கப்பட்டிருக்காததன் விளைவாக அத்தகைய நிதியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தால் கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் Air Vice Marshall ஆல் மேற்கொள்ளப்பட்ட விக்கங்களின் பிரகாரம் இலங்கை வான்படையின் நிறைவேற்றுக் கணக்காய்வுப் பிரிவால் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான வருடாந்தக் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக பாராளுமன்றத்தின் மேற்பார்வையை ஒழுங்குபடுத்துவதற்காக பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | இரத்மலானை தள முகாமில் இலங்கை வான்படையால் நடாத்தப்படுகின்ற நூதனசாலை 2018 ஏப்ரல், மே மற்றும் யூன் மாதங்களில் ரூபா 1,719,826 தொகையான வருமானத்தை ஈட்டியிருந்ததுடன் அதில் 10 சதவீதம் தொடக்கம் 20 சதவீதம் வரை மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. நூதனசாலையின் செலவினங்களை மேற்கொள்வதற்காக கையிலுள்ள வருமான மீதியை நிறுத்தி வைக்கும் நோக்கம் காணப்பட்ட போதிலும் 2018 சனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியின் போது திரட்டிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டதில் ரூபா 808,267 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதிக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்தால் நூதனசாலையின் மீண்டெழும் செலவினம் மேவுகை செய்யப்பட வேண்டும். | வருமானத்தின் ஒரு பகுதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றதுடன் ஏனைய மூலங்களிலிருந்தான வருமானம் உரிய நிதியங்கள் ஊடாக வீரர்களின் நலன்புரி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படுகின்றன. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தாலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை விளங்கிக்கொள்ளாததன் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இலக்கு கட்டங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் போன்றவற்றை இனங்காண்பதற்கு இலங்கை வான்படையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் கீழான இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவை தொடர்பான திட்டங்களை காலக்கிரமத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |